சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.146/2018

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ம் நாள் பி.வாசா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலகுமார் | வயது | 54 |
| த/பெ | ராஜூ | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிறுமுகை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |

-

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

நான் எங்கு வேலை செய்கிறேன் என்றால் உடுமலைப்பேட்டையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். சுமார் 12 ஆண்டுகளாக அங்கு வேலை செய்கிறேன். என்னுடைய குடியிருப்பு முகவரி என்ன என்றால் கதவு எண். 87, பட்டியன்னன் தெரு, கோயமுத்தூர்-41. அந்த முகவரியில் எத்தனை ஆண்டுகள் குடியிருந்து வருகிறேன் என்றால் 2 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்னர் எங்கு குடியிருந்தேன் என்றால், கோயமுத்தூர், பி.என்,புதூர், 2-வது தெருவில் சுமார் 5 ஆண்டுகளாக குடியிருந்து வந்தேன். அதற்கு முன்பு எங்கு குடியிருந்தேன் என்றால் கோயமுத்தூரில் தான் குடியிருந்தேன். முகவரி நினைவு இல்லை. கோயமுத்தூரில் சுமார் 8 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். எனக்கு வேலை கிடைத்ததும் கோயமுத்தூர் சென்று விட்டேன் என்றால் சரி யல்ல. 1998 ல் எனக்கு திருமணம் ஆனதும் வாரா வாரம் சிறுமுகைக்கு வந்து விடுவேன். நான் இது வரை சிறுமுகைக்கு வந்ததே இல்லை என்றும் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் தான் நான் சிறுமுகைக்கு வந்து உள்ளேன் என்றால் சரி யல்ல. எனது அம்மா இறப்பதற்கு முன்னர் எந்த முகவரியில் குடியிருந்து வந்தார் என்றால் சிறுமுகையில் உள்ள பாரதி நகர் என்ற முகவரியில் குடியிருந்து வந்தார். எனது

அம்மா பாரதி நகரில் குடியிருக்க வில்லை என்றும் அவர் சௌடேஸ்வரி நகர் என்ற முகவரியில் தான் குடியிருந்து வந்தார் என்றால் சரி யல்ல. அதனால் தான் நான் தாக்கல் செய்த உயிலில் என்ன என்ன சொத்துக்கள் எனக்கு வந்து உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியவில்லை என்றும் நான் எனது அம்மாவை ஏமாற்றி உயில் ஆவணம் பெற்று உள்ளேன் என்றால் சரி யல்ல. எனது தாயாரை எனது பாட்டி தான் கடைசி காலத்தில் பராமரித்து வந்தார் என்றால் சரி யல்ல. எனது தாயார் எதனால் இறந்தார் என்றால் அவருக்கு சர்க்கரை வியாதி வந்ததால் இறந்தார். நான் கோயமுத்தூர் சென்ற பின்னர் சிறுமுகைக்கு வரவே இல்லை என்றும் எனது தாயார் மற்றும் தகப்பனாரை கடைசி காலத்தில் நான் பார்க்க வில்லை என்றால் சரி யல்ல. அதனால் நான் பொய்யாக எழுதி வாங்கிய உயில் செல்லாது என்றால் சரி யல்ல. வாதிக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் சரி யல்ல.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/-G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.